**செ. கு. எண்**: 159 **நாள்**: 27.04.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.4.2012

21.4.2012 அன்று திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ஆவடியிலிருந்து திருவள்ளூர் செல்லும் சாலை நடைபாதையில் நடந்து சென்று கொண்டிருந்த விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம் கீழ்மங்களம் கிராமத்தைச் சேர்ந்த திரு. செட்டி என்பவரின் மகன் திரு. கணேசன் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. கணேசன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. கணேசனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**